## தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் - 2017

தேசிய விவசாய வியாபார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2010 பெப்ரவரி 23 ஆந் திகதிய 797-எல்கே இலக்க நிதியிடல் உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையிலுள்ள 9.03 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

தேசிய விவசாய வணிக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதியிடல் உடன்படிக்கையின் பிரகாரம், இலங்கை மத்திய வங்கி முன்னணி நிகழ்ச்சித்திட்ட முகவராக உள்ளதுடன் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான பொறுப்பினையும் கொண்டுள்ளது. எனினும், 2013 சனவரியில் இடம்பெற்ற விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் இடைக்கால மீளாய்விற்குப் பின்னரான தூதுக்குழுவின் பரிந்துரைகளின் பிரகாரம், பொருளாதார அபிவிருத்தி அமைச்சு 2013 மே தொடக்கம் முன்னனி நிகழ்ச்சித்திட்ட முகவராகவிருந்ததுடன் ‘‘திவிநெகும’’ நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைப்பதன் மூலம் நிகழ்ச்சித்திட்டத்தினை அமுல்படுத்தலுக்கான ஒட்டுமொத்த பொறுப்பினையும் கொண்டிருந்தது. 2015 ஏப்ரல் 30 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைகள் கிராமிய பொருளாதார அமைச்சுக்கு மாற்றப்பட்டிருந்தது. தற்போது, நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைககள் மாண்புமிகு சனாதிபதியின் செயலாளரால் தொடரப்படுகின்றது. சிறு பற்று நில விவசாயிகளும் காணியற்றோரும், குறிப்பாக இளைஞர்கள் சந்தைச் சங்கிலி அபிவிருத்தியிலும் இணைப்பு உறுப்புகளிலும் பங்குபற்றுவதன் மூலம் (1) தமது வருவாயை அதிகரித்து அதன் மூலம் பண்ணை உற்பத்தி விலை அதிகரிப்பு, பண்ணை உற்பத்தித் திறன் அதிகரிப்பு என்பன உருவாகி செயல்முறைக்குட்படுத்தப்படும் பண்ணை உற்பத்திப் பொருட்கள் பெறுமதிமிக்கனவாகுவதற்கும் (2) காணியற்றோருக்கும் இளைஞர்களுக்கும் நிதியளிப்பும் பயிற்சியும் வழங்கி அவர்களுக்கு முன்னேற்றம் மிக்கதும் அதிகரித்ததுமான வேலை வாய்ப்புக்களை வழங்குவதும் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும். நிதியிடல் உடன்படிக்கையின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 4,309.52 மில்லியனுக்கு சமமான 32.9 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் ரூபா 3,268.75 மில்லியனுக்கு சமமான 25 மில்லியன் அமெரிக்க டொலர்கள் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு இணங்கப்பட்டது. எஞ்சிய நிதியானது இலங்கை அரசாங்கம், மேம்படுத்தல் கம்பனிகள், உற்பத்தியாளர்கள், சமூக அடிப்படையிலான அமைப்புகள் மற்றும் பங்குபற்றல் நிதி நிறுவனங்களால் பங்களிப்புச் செய்யப்படுவற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2011 பெப்ரவரி 01 இல் தொடங்கி 2016 மார்ச் மாதமளவில் நிறைவேற்றுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் வளங்களை மீள ஒதுக்கீடு செய்வதற்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் பூர்த்தியாக்கல் திகதியினை 2017 டிசெம்பர் 31 ஆந் திகதி வரை நீடிப்பதற்கும் இணங்கியிருந்தது.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்கள் மற்றும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தின் செயற்திட்டக் கணக்காய்வுக்கான வழிகாட்டிகளுக்கும் இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருட்படுத்தக்கூடிய தவறான கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தின் முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் நிகழ்ச்சித்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் உறுதி செய்வதன் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட செலவினம் நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர்களின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் நிகழ்ச்சித்திட்டத்தின் முன்னேற்றம், நிகழ்ச்சித்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து எழுந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைக் காட்டக்கூடியவாறு தொடர்ச்சியான அடிப்படையில் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழான பற்றுதல்கள் நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளிற்கிணங்க மேற்கொள்ளப்பட்டிருந்தனவா என்றும்,

(உ) நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் விசேட (டொலர்) கணக்கின் புதுப்பித்தல் மற்றும் மீள்பெறுகை மற்றும் அதன் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும், 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியில் இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டுள்ளனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள், மற்றும் உபகரணங்கள் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கலிற்காக கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைச் சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஒ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதுமாகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய,

(அ) நிகழ்ச்சித்திட்டமானது 2017 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கீட்டுப் பதிவேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் ஜஎவ்ஏடீ வழிகாட்டலுக்கு அமைய 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களிற்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) நிகழ்ச்சித்திட்டத்தால் பேணப்பட்ட புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளில் விசேட (டொலர்) கணக்கின் பற்றுதல்கள் மற்றும் மீள் நிரப்பல்கள் என்பனவும் அதன் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் என்பனவும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன என்றும் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதியானது அத்திகதியில் உள்ளவாறான இலங்கை மத்திய வங்கியால் பேணப்பட்ட கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கஞ் செய்யப்பட்டுள்ளன என்றும்,

(ஈ) சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் மீது நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கிணங்க மீளளிப்புகளுக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவை என நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடியுமென்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை சீராக்குவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) நிதியிடல் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு நிதியேற்பாடு மற்றும் மீளாய்வாண்டின்போதும் 2017 டிசெம்பர் 31 வரையிலுமான நிதிப் பயன்பாடு தொடர்பான சில குறிப்பிடத்தக்க புள்ளிவிபரம் கீழே காட்டப்பட்டுள்ளன.

| தோற்றுவாய் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக இணங்கப்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான மீளாய்வு செய்யப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்தப்பட்ட நிதி | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின்போது | | 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் | அமெரிக்க டொலர் மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஜஎவ்ஏடீ | 25.00 | 3,268.75 | 1,235.00 | 7.05 | 1,077.60 | 19.33 | 2,839.91 |
| தனியார் கம்பனிகள் | 5.25 | 686.44 | - | | 301.31 | | 406.01 |
| சமூக அடிப்படையிலான அமைப்புகள் | 0.76 | 99.37 | - | - | - | - | - |
| பிஎவ்ஜ | 0.39 | 50.99 | - | - | - | - | - |
| உற்பத்தியாளர்கள் | 0.57 | 74.53 | - | - | - | - | - |
| இலங்கை அரசாங்கம் | 0.99 | 129.44 | 50.00 | - | 44.98 | - | 65.93 |
| **மொத்தம்** | **32.96** | **4,309.52** | **1,285.00** | **7.05** | **1,423.89** | | **3,311.85** |

மேற்படி தகவல்களின் பிரகாரம், ரூபா 3,268.75 மில்லியனுக்குச் சமமான 25 மில்லியன் அமெரிக்க டொலர் ஒதுக்கீட்டில், ரூபா 2,839.91 மில்லியனுக்குச் சமமான 19.33 மில்லியன் அமெரிக்க டொலரே 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பயன்படுத்தப்பட்டிருந்தது. மேலும், மேம்படுத்தும் கம்பனிகள் வழங்கிய தொகை ரூபா 406.01 மில்லியன் மாத்திரமே. நிதியளிப்பு உடன்படிக்கைகளின் பிரகாரம் முதலீடு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்ட தொகை ரூபா 686.44 மில்லியனாகும்.

**3.2 பௌதீக முன்னேற்றம்**

நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் தனியார் துறை மற்றும் சமுதாய அடிப்படையிலான நிறுவனங்களின் உறுப்புகளின் கீழ் வழி நடத்தப்படும் சந்தைப்படுத்தல் சங்கிலித்தொடர் அபிவிருத்தி மற்றும் ஒருங்கிணைப்பு என்பவற்றின் மூலம் அமுலாக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. இதன் பொருட்டு சிறிதளவிலான நிதியளிப்புடன் இளைஞர்களுக்கான பயிற்சி போன்றவையும் வழங்கப்படும். பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிகழ்ச்சித்திட்டத்தால் மேம்பாட்டாளர் கம்பனிகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளின் பிரகாரம், பாற் பண்ணையில் ஈடுபட்டுள்ள 02 மேம்பாட்டாளர் கம்பனிகளும் ஏனைய 04 கமத்தொழில் ஈடுபாடுடைய மேம்பாட்டாளர் கம்பனிகளும் வெளிப் பயிர்ச்செய்கையாளர்களின் பொருட்டு காப்புறுதிகளைப் பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிகழ்ச்சித்திட்டத்திற்கும் மேம்பாட்டாளர் கம்பனிகளுக்குமிடையேயான உடன்படிக்கைப் பிரகாரம், 878 கடல் விதை வெளிப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு மொனோலைன் மற்றும் றாப்ட்ஸ் என்பவற்றை ரூபா 34.27 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் வழங்குவதற்கிருந்தபோதும், ரூபா 26 மில்லியன் பெறுமதியான 667 மொனோலைன் மற்றும் றாப்ட்ஸ் என்பனவே ஒப்பந்தம் முடியும் தறுவாயில் 2017 டிசெம்பர் 21 அன்று வழங்கப்பட்டிருந்தன. நிகழ்ச்சித்திட்டம் செயற்படுத்தப்பட்ட பெரும்பாலான பகுதிகளில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக இலக்கை எய்தமுடியவில்லை என இதன் பொருட்டு விளக்கமளிக்கப்பட்டிருந்தது.

(இ) கணக்காய்விற்குக் கிடைக்குமாறு செய்யப்பட்ட தகவல்களின் பிரகாரம், பாற்பண்ணையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளது சமூக, தொழில்நுட்பப் பிரச்சினைகளில் நிலவும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதெற்கென நிகழ்ச்சித்திட்டத்தால் 20 சமூக வேலையாளர்கள் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், மாத்தளை மாவட்டத்தின் ரத்தொட்டை, யட்டவத்த ஆகிய இடங்களில் உள்ள பாற் பண்ணையாளர்களது இடங்களுக்குக் கணக்காய்வாளர்கள் மேற்கொண்ட நேரடி விஜயங்களின்போது பாற்பண்ணையாளர்களது மாட்டுத் தொட்டிகள் நீர்ப்பற்றாக்குறை காரணமாக நல்ல நிலைமையில் இல்லாதிருப்பது புலனாகியது. மேலும், யட்டவத்த, பல்லேபொல, ரத்தொட்ட, நாவுல ஆகிய மாத்தளை மாவட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட நேரடி விஜங்களின்போது, நிர்மாணிக்கப்பட்ட மாட்டுத் தொட்டிகளில் மின்சார வசதிகள் இன்மையால் விவசாயிகள் பால் கறப்பதற்கான இயந்திரங்களைப் பயன்படுத்தப்படாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) மேலும், வெள்ளரிக்காய் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுள்ள மேம்பாட்டாளர் கம்பனி வெளிப் பயிர்ச் செய்கையாளர்களது வெள்ளரிக்காய் விற்பனையின்போது ஒரு கிலோகிராமிற்கு ரூபா 1.00 வீதம் உதவு தொகையை வழங்கி அவர்களுக்கு நலன்புரி நிதியம் ஒன்றை நிறுவியிருக்கவுமில்லை.

(உ) விதை வெங்காயம் மற்றும் இரசாயன சோளம் ஆகிய வியாபாரத் துறைகளில் ஈடுபட்டிருந்த 02 மேம்பாட்டாளர் கம்பனிகள் சகல உற்பத்திப் பொருட்களையும் கொள்வனவு செய்ய வேண்டியபோதும், தம்புள்ளவிலும் அனுராதபுரத்திலும் உள்ள விவசாயிகளது உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின்போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) மேம்பாட்டாளர் கம்பனிகள் அனுராதபுர மாவட்டத்தில் இரசாயன சோளப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகளை ஆரம்ப கட்டங்களில் தெரிவு செய்யும்போது அவர்களது நிதி மற்றும் உடல் ஆற்றல்களைக் கருத்திற்கொள்ளாது தெரிவு செய்திருந்தமையால் கடன் வழங்குவதைத் தொடர முடியாது விவசாயிகளுக்கு மொத்த நலன்களையும் வழங்க முடியாது போனமை அவதானிக்கப்பட்டது.

(எ) நிகழ்ச்சித்திட்டத்தால் வழங்கப்பட்ட உப கடன்களிலிருந்து ஏனைய கடன் திட்டங்களின் கீழ் விவசாயிகள் பெற்றிருந்த கடன மீதி நிலுவைகளை அறவிடுவதற்கு அனுராதபுரத்தில் உள்ள 02 உத்தரவு பெற்ற விசேட வங்கிகள் நடவடிக்கை எடுத்திருந்தமை அவதானிக்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டத்தால் வழங்கப்பட்ட நிதி உதவி இரசாயன சோளப் பயிரிச் செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டிராமையை இது சுட்டிக்காட்டுகின்றது.

(ஏ) கித்துள் உற்பத்திப் பொருட்களின் உற்பத்தி குறைவடைந்திருந்தமையால் இரத்தினபுரி மாவட்டத்தில் எஹலியகொடவில் கித்துள் உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பவர்களுக்கு நிகழ்ச்சித்திட்டத்தால் வழங்கப்பட்டிருந்த தேன் உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் துருப்பிடிக்காத உருக்குக் பாத்திரங்களும் தேனைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்கான துருப்பிடிக்காத உருக்கு கொள்கலன்களும் பயன்படுத்தப்படாதிருந்தன.

(ஐ) இடைக்கிடைச் செவ்வையின் அடிப்படையில் யாழ்ப்பாணம், காத்தான்குடி, கல்முனை ஆகிய இடங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட விஜயங்களின்போது சிறிய அளவிலான நிதியளிப்புத் தேவைகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களிலும் வங்கிகளுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளிலும் குறிப்பிடப்பட்டவற்றை விட வேறு விடயங்களுக்கு 5 கடனாளிகள் நிதியைப் பயன்படுத்தியிருந்தமை அவதானிக்கப்பட்டது.